பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 06 2026** **FRIDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று குஜராத் மற்றும் டாமனில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

2. உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசு துணைத்தலைவர், பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்ட இருமாத நிதிக்கொள்கையில் ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை.

4. ஈரான் அணு ஆயுதத்தை நிரந்தரமாக கைவிடுவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

5. அமெரிக்கா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — ரித்விக் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று குஜராத் மற்றும் டாமனில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

முதல்கட்டமாக குஜராத் மாநிலம் சூரத் செல்லும் பிரதமர், 18 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டங்களை தொடங்கிவைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் பேசுகிறார்.

சூரத்தில் 200 படுக்கைகள் கொண்ட இ எஸ் ஐ மருத்துவமனையையும் அவர் திறந்துவைக்கிறார்.

இன்று மாலை டாமன் செல்லும் பிரதமர், அங்கு 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து 70 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

மருத்துவம், சிவில் விமான போக்குவரத்து, சுற்றுலா, உள்கட்டமைப்பு, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும்.

<<<<<>>>>>

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசு துணைத்தலைவர், பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், சுற்றுச்சூழலையும், உயிரி பல்லுயிர் பெருக்கத்தையும் பாதுகாத்து நிலையான வாழ்க்கை சூழலை உறுதி செய்ய அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற அறநெறிப்படி வாழ்வோம் என்றும் திரு சிபி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள சுற்றுச்சூழல் தின வாழ்த்துச் செய்தியில், நிலையான வளர்ச்சிக்கு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் உள்ளிட்ட பல திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் விடுத்துள்ள செய்தியில், இயற்கை மற்றும் பருவநிலையை பாதுகாத்து வளமான எதிர்காலத்திற்கு உறுதியேற்போம் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு வனத்தையும், வன உயிரினங்களையும் பாதுகாக்க பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

அதிக அளவில் மரங்களை நட்டு, பசுமை இந்தியாவை உறுதி செய்வோம் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியை நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்கால சந்ததியினருக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிக்க பூமியை அளிக்க இந்நாளில் உறுதியேற்போம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

வெளிநாட்டு நிறுவன முதலீட்டு வரிக்கு மத்திய அரசு விலக்கு அளித்துள்ளது.

மேலும், அரசு பங்குகள் மீதான முதலீடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டி வருவாய்க்கான வரியும் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதை நடைமுறைப்படுத்தும் வகையில், வருமான வரி திருத்தத்திற்கான அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த வரிச்சலுகைகள் நடப்பாண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத்தின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுவதையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், உத்தரப்பிரதேச மாநிலத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர் யோகி ஆதித்யநாத் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் வாழ்க்கை தரம் மேம்படவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அவர் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

இவ்வாண்டு 12-ஆம் வகுப்பு சிபிஎஸ்இ தேர்வு எழுதிய மாணவர்களில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மறு மதிப்பீடு, மறு கூட்டல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஆன்லைன் மூலம் விண்ணப்பித்திருப்பதாக சிபிஎஸ்இ தெரிவித்துள்ளது.

7 ஆயிரத்து 314 பேர் மதிப்பெண்களை சரிபார்க்கவும், 63 ஆயிரம் பேர் மறுமதிப்பீடு கோரியும் விண்ணப்பித்துள்ளனர்.

விடைத்தாள் நகல்கள் கோரியும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக சிபிஎஸ்இ தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 13-ஆம் தேதி சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் தொடர்பாக, அதிக மாணவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இவ்வாண்டு தொடங்கப்பட்ட இணையதளத்தின் மூலம், தங்கள் கோரிக்கைகளுக்கு மாணவர்கள் தீர்வுகண்டு வருவதாகவும் சிபிஎஸ்இ கூறியுள்ளது.

<<<<<>>>>>

நடப்பாண்டில் தொடர்ந்து இரண்டாவது முறையாக ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதங்களில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

மும்பையில் இன்று ரிசர்வ் வங்கியின் இரண்டாவது இருமாத நிதிக்கொள்கையை வெளியிட்டு பேசிய அதன் ஆளுநர் திரு சஞ்சய்

மல்ஹோத்ரா, ரிசர்வ் வங்கி, வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் குறுகியகால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம் ஐந்து புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாகவே நீடிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடு ஆறு புள்ளி ஒன்பது சதவீதத்தில் இருந்து, 6 புள்ளி ஆறு சதவீதமாக குறைந்துள்ளதாக அவர் கூறினார்.

நடப்பாண்டிற்கான நுகர்வோர் விலை குறியீட்டெண் அடிப்படையிலான பணவீக்க மதிப்பீடு 4 புள்ளி ஆறு சதவீதத்தில் இருந்து ஐந்து புள்ளி ஒரு சதவீதமாக உயர்ந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

வெளிநாடுவாழ் இந்தியர் மற்றும் வெளிநாட்டு குடியுரிமை பெற்ற இந்தியர்கள் பங்குகளில் முதலீடு செய்வதற்கான வரம்பையும் ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது.

<<<<<>>>>>

ரெப்போ வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி உயர்த்தாதற்கு Assocham தொழில் வர்த்தக கூட்டமைப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் திரு சௌரப் சன்யான் செய்தியாளர்களிடம் பேசுகையில், வட்டி விகிதம் ஐந்து புள்ளி இரண்டு

ஐந்து சதவீதமாக தொடர்வதால் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் பணவீக்கமும் அதிக அளவில் உயராமல் கட்டுக்குள் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் **436** தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்துவது குறித்து தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செலயகத்தில் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று காலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக தடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அரசின் பல்வேறு துறைகளில் ஊழல் மற்றும் லஞ்சத்தை ஒழிக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியதாகவும் திரு நிர்மல்குமார் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஏழை மக்களின் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒருபகுதியாக, தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் பிரதமரின் விபத்து காப்பீடு திட்டத்தில் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளதாக அம்மாவட்ட முன்னோடி வங்கியின் மேலாளர் திருமதி லில்லிபாய் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — லில்லி பாய் - 33 Sec. )***

<<<<<>>>>>

தமிழக பிஜேபி முன்னாள் தலைவர் திரு அண்ணாமலை அளித்த ராஜினாமாவை பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் ஏற்றுக்கொண்டுள்ளார்.

திரு அண்ணாமலை, பிஜேபி-யின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் விலகுவதாக தமது ராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

ஈரான் அணு ஆயுதத்தை நிரந்தரமாக கைவிடுவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அந்நாட்டுடனான சமரச பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், அனைத்து பேச்சுவார்த்தைகளிலும் அணு ஆயுதத்தை

ஈரான் கைவிட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அணு ஆயுதங்களை பிற நாடுகளிலிருந்து பெறுவதற்கு ஈரான் ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் திரு டோனல்டு ட்ரம்ப் திட்டவட்டமாக கூறினார்.

<<<<<>>>>>

ஓமன் நாட்டின் கடல் பகுதி அருகே கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் இரண்டு இடங்களையொட்டி, ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதால் மினா ஏற்றுமதி முனையத்தில் எரிபொருள் நிரப்பம் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் தலைநகர் மஸ்கட் அருகே அமைந்துள்ள மினா ஏற்றுமதி முனையத்திலிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

எரிபொருள் ஏற்றுமதியில் நீண்டகாலத்திற்கு ஏற்படும் பாதிப்பு, ஓமன் பொருளாதாரத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

<<<<<>>>>>

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — ரித்விக் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 1-6, 10-6 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Andrew Fenty** — வெனிசுலாவின் **Brandon Perez** இணையை வென்றது.

----------------

**(C/O)18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா — பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஜப்பானில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<END>>>>>**